பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08. 01. 2025 7. 15
புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள் -

1. ஆந்திர பிரதேசத்தில் இரண்டு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று தொடங்கி வைக்கிறார்.
2. புதிய குற்றவியல் சட்டங்கள் விரைவாக நீதி வழங்குவதை உறுதி செய்யும் என உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
3. வெளிநாடுவாழ் இந்தியர்களின் 18-வது மாநாடு புவனேஸ்வரில் இன்று தொடங்குகிறது.
4. ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் முதல் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.
5. நியூயார்கில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rushil khosla** – ரூமேனியாவின் எரிக் டேவிட் வெர்டஸ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி ஆந்திர பிரதேச மாநிலத்தில் சுமார் இரண்டு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இன்று ஆந்திர மாநிலம் செல்லும் பிரதமர், **Pudimadaka** பகுதியில் என் டி பி சி பசுமை எரிசக்தி நிறுவனத்தின் பசுமை ஹைட்ரஜன் வளாகத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார்.

ஒரு லட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டிலான இத்திட்டத்தின் மூலம் 20 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியும், நாள் ஒன்றுக்கு ஆயிரத்து 500 டன் பசுமை ஹைட்ரஜனும் உற்பத்தி செய்யப்படுவதோடு, ஏழாயிரத்து 500 டன் பசுமை மெத்தனால், பசுமை யூரியா மற்றும் விமான எரிபொருள் உள்ளிட்ட உப பொருட்களும் உற்பத்தி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விசாகப்பட்டினத்தில் தெற்கு கடற்கரை ரயில்வே தலைமையகத்தை திறந்து வைக்கும் பிரதமர், சுமார் 19 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே மற்றும் சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டவுள்ளார்.

நாளை ஒடிஸா செல்லும் பிரதமர், புவனே ஸ்வரில் 18-வது வெளிநாடு வாழ் இந்தியர் மாநாட்டை முறைப்படி தொடங்கி வைக்கிறார்.

[]<<<>>>[]

18-வது வெளிநாடுவாழ் இந்தியர்களின் மூன்று நாள் மாநாடு ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் இன்று தொடங்குகிறது.

50 நாடுகளில் வசிக்கும் இந்திய வம்சாவழியினர் இம்மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

மாநாட்டின் முதல் நாளான இன்று வெளிநாடுவாழ் இளைஞர் தினமாக கொண்டாடப்படுகிறது.

ஒடிசா மாநில அரசும், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையும் இணைந்து இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன.

மாநாட்டின் நிறைவு நாளான நாளை மறுதினம் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்று பிரவாசி பாரதீய சம்மான் விருதுகளை வழங்க உள்ளார்.

ட்ரினிடாட் மற்றும் டொபாக்கோ அதிபர் திருமதி **Christine Carla kangaloo** சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார்.

இந்த மாநாடு வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கு வெளிநாடுவாழ் இந்தியர்களின் பங்களிப்பு என்ற கருப்பொருளில் நடத்தப்படுகிறது.

[]<<<>>>[]

இந்தியாவும் - ஐரோப்பிய யூனியனும் தங்களிடையேயான நீடித்த ஒத்துழைப்பை வலுப்படுத்த பாடுபட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

ஐரோப்பிய யூனியன் தலைவர் திரு ஆண்டனியோ கோஸ்டாவுடன் நேற்று அவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இது குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்தியா-வும், ஐரோப்பிய யூனியனும் இயற்கையிலேயே நட்புடன் திகழ்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தொழில்நுட்பம், பசுமை எரிசக்தி, டிஜிட்டல் தளம், வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இருதரப்பும் உறுதிபூண்டுள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

புதிய குற்றவியல் சட்டங்கள் விரைவாக நீதி வழங்குவதை உறுதி செய்யும் என உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

உத்திரபிரதேசத்தில் மூன்று புதிய சட்டங்களின் அமலாக்கம் குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத்துடன் அவர் நேற்று ஆலோசனை நடத்தினார்.

இந்த சட்டங்கள் தண்டனை விதிக்கும் நோக்கில் கொண்டு வரப்படவில்லை என்றும், மாறாக பாதிக்கப்பட்டவருக்கு நியாயம் கிடைக்கச் செய்வதற்காகவே கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உத்திரபிரதேசம் போன்ற பெரிய மாநிலங்களில் மூன்று குற்றவியல் சட்டங்களையும் முழுமையாக அமல்படுத்துவது நாடுமுழுவதும் ஆக்கப்பூர்வ விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் திரு அமித்ஷா நம்பிக்கை தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து மற்றும் **Guernsey** நாடுகளில் ஐந்து நாள் பயணமாக மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா நேற்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

தமது பயணத்தின் முதல்கட்டமாக லண்டன் சென்றுள்ள அவர், அந்நாட்டு பிரதிநிதிகள் சபையின் தலைவர் திரு **Lindsay hoyle** மற்றும் பிரபுக்கள் சபையின் தலைவர் திரு **Mc-fall** ஆகியோரை சந்தித்து பேசவுள்ளார்.

அங்குள்ள அம்பேத்கர் அருங்காட்சியகத்தை பார்வையிடும் திரு ஓம் பிர்லா, மகாத்மா காந்தி சிலைக்கு மரியாதை செலுத்துவதுடன், இங்கிலாந்து வாழ இந்திய வம்சாவழியினருடனும் கலந்துரையாடவுள்ளார்.

**Guernsey** தீவில் நாளை மறுநாள் நடைபெறவுள்ள காமன்வெல்த் நாடாளுமன்ற சபாநாயகர்கள் மற்றும் அவைத் தலைவர்களுடன் நிலைக்குழுக் கூட்டத்திற்கும் திரு ஓம் பிர்லா தலைமையேற்கவுள்ளார்.

[]<<<>>>[]

இந்திய விண்வெளி ஆய்வு மையம் இஸ்ரோவின் புதிய தலைவராக திரு வி நாராணயன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய தலைவர் திரு சோம்நாத்தின் பதவிக்காலம் முடிவடைவதையடுத்து, கேரளாவில் உள்ள திரவ எரிபொருள் மையத்தில் இயக்குநராக பணியாற்றி வரும் திரு நாராயணன், இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் விண்வெளித்துறையின் செயலாளராகவும் பதவி வகிப்பார் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

திரு நாராயணன் வரும் 14-ஆம் தேதி இஸ்ரோ தலைவர் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

[]<<<>>>[]

ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் முதல் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

கடந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மசோதா நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வுக்கு அனுப்பப்பட்ட நிலையில், இன்று அக்குழு ஆலோசனை நடத்தவுள்ளது.

39 உறுப்பினர்களைக் கொண்ட இந்த கூட்டுக்குழுவில் பிஜேபி-யின் திரு பி பி சௌத்திரி, திரு அனுராக்சிங் தாக்கூர், காங்கிரஸ் கட்சியின் திருமதி பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

[]<<<>>>[]

முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜிக்கு தில்லி ராஜ்காட் பகுதியில் உள்ள ராஷ்ட்ரீய ஸ்மிருதி வளாகத்தில் நினைவிடம் அமைக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதையொட்டி பிரணாப் முகர்ஜியின் மகள் திருமதி சர்மிஷ்டா முகர்ஜி புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திரமோடியை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

[]<<<>>>[]

உலக தெலுங்கு மாநாடு ஆந்திர மாநிலம் ராஜமகேந்திரவரத்தில் உள்ள கோதாவரி சர்வதேச பல்பலைக்கழக வளாகத்தில் இன்று தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் முன்னாள் குடியரசு துணைத்தலைவர் திரு எம் வெங்கையா நாயுடு, உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு என் வி ரமணா மற்றும் ஆந்திரா – தெலங்கானா மாநிலங்களின் ஆளுநர்கள் உள்ளிட்டோர் இதில் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநாட்டில் 560 தெலுகு மொழி கவிஞர்கள் பங்கேற்கின்றனர்.

இம்மாநாட்டையொட்டி நடத்தப்பட்ட மாநில அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

[]<<<>>>[]

அமெரிக்க அதிபராக பொறுப்பேற்க உள்ள திரு டொனால்டு ட்டிரம்புக்கு எதிரான முறைகேடு வழக்கில் தண்டனை விதிப்பதை ஒத்தி வைக்குமாறு திரு ட்டிரம்ப் விடுத்த கோரிக்கையை நியூயார்க் மேல்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

இந்த வழக்கில் நாளை மறுதினம் தீர்ப்பு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் புதிய அதிபர் பதவியேற்பு விழா இம்மாதம் 20-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில் தண்டனை விதிப்பதை ஒத்தி வைக்குமாறு திரு ட்டிரம்ப் கேட்டுக்கொண்டிருந்தார்.

[]<<<>>>[]

நியூயார்கில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rushil khosla –** ருமேனியாவின் எரிக் டேவிட் வெர்டஸ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அந்த இணை, கனடாவின் மைக்கேல் **Arseneault –** நிகோலஸ் **Arseneault** - இணையை 7-6, 6-1 என்ற செட் கணக்கில் வென்றது.

[]<<<>>>[]

சர்வதேச டேபிள் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மனவ் தாக்கர் - மணிக்காபத்ரா இணை அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தோஹாவில் நேற்று நடைபெற்ற முதல் தகுதி சுற்று ஆட்டத்தில் இந்த இணை — பிரான்ஸ் இணையை 3-1 என்ற செட் கணக்கில் வென்றது.

இன்று நடைபெறும் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை — சீன இணையை எதிர்கொள்கிறது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Diya chitali** - **Ayhika** முகர்ஜி-யை 3-0 என்ற செட் கணக்கில் வென்றார்.

**[]<<<>>>[]**

கோ-கோ உலகக்கோப்பை போட்டிகள் புதுதில்லியில் வரும் 13-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளன.

இந்த போட்டியின் ஏ- பிரிவு ஆட்டத்தில் இந்தியா, இலங்கை, அமெரிக்க, பிரேசில், நேபாளம், உள்ளிட்ட 20 ஆடவர் அணிகளும், 19 மகளிர் அணிகளும் பங்கேற்கவுள்ளன.

**[]<<<>>>[]**

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கலிங்கா அணி 6-0 என்ற கோல் கணக்கில் பெங்கால் அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் கோணாசிக்கா அணி — தமிழ்நாடு அணியையும், உத்திரபிரதேச அணி — ஹைதராபாத் அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் கோவா அணி — ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

கோவாவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

***End of News***